[1971 ஜூலை 22

அனுப்பிவைத்தால்தான் அந்தத் தகுதிகளின் அடிப்படையிலே நகராட்சிகளாக மாற்றமுடியும். மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்த கருத்தைப்போன்ற ஒரு அச்சம் இருக்கிறதென்றால் தேவையில்லாத வகையிலே அதை நகராட்சியாக மாற்றித்தான் தீரவேண்டும். நீங்கள் அதிக வரிகட்டித்தான் தீரவேண்டுமென்று யார் மீதும் திணிக்க இயலாது. அவர்களாக விரும்புவார்களானால் தீர்மானம் போட்டுக் கேட்டுக்கொண்டால் அதை அரசாங்கம் பரிசீலனை செய்யும். இந்த மூன்று பேரூராட்சிகளும் அடிப்படை தகுதிகள் இல்லாதவை என்பதால்தான் நிறுத்திவைக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

திரு. இ. எஸ். தியாகராசன்: தலைவர் அவர்களே, செங்கை மாவட்டத்திலே நகரப் பஞ்சாயத்துக்கள் நகராட்சிகளாக ஆக்கப்படும் உத்தேசம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: மாநிலம் முழுவதும் பேரூராட்சிகள் நகராட்சிகளாக ஆகவேண்டுமென்ற செயற்குறிப்பு அரசாங்கத்தின் பரிசிலனையில் இருந்துவருகிறது. அதைப் பற்றிய விவரங்கள் இல்லை. தனிச் கேள்வி போட்டால் விவரங்கள் தரலாம்.

திரு. ரா. ரா. முனுசாமி: தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள வந்தவாசி நகராட்சியாக மாற்றப்படுவதற்கான தகுதியையும் பண வசதியையும் பெற்றிருப்பதாகத் தீர்மானம் போட்டு அரசுக்கு அனுப்பியிருக்கிறார்களா? ஆம் எனில், அதை முனிசிபாலிட்டியாக ஆக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: செய்யாறு, வந்தவாசி, போளூர் பேரூராட்சிகளிடமிருந்து இயக்குநருக்கு கோரிக்கைகள் வரவில்லை, மாவட்ட ஆட்சித் தலைவருக்கு கோரிக்கைகள் வரவில்லை. சட்டப்படி அவைகள் நகராட்சியாகும் தகுதிகள் இல்லையென்று தெரிவிக்கப்பட்டு இருக்கிறது.

திரு. மா. வே. நாராயணசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வில்லிவாக்கம் பஞ்சாயத்து டவுன் பஞ்சாயத்தாக . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பில்லை. எனவே, இந்தத் துணைக் கேள்வி அனுமதிக்கப்படவில்லை.

திருப்பூரை தேர்வுநிலை நகராட்சியாக்கல்

* 368 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பூர் நகரமன்றத்தை 'தேர்வு நிலை நகராட்சியாக' மாற்றும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசிலனையில் உள்ளதா?

1971 ஜூலை 22]

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : திருப்பூர் நகராட்சியை தேர்வுத்தர நகராட்சியாக மறுவகைப்பாடு செய்வதற்காக அந்நகராட்சியின் பொறுப்பு அதிகாரியிடமிருந்து பெறப்பட்ட செயற்குறிப்பு ஆய்வு செய்யப்பட்டது. தேர்வுத்தர நகராட்சியாக மறுவகைப்பாடு செய்வதற்கான நிபந்தனையை இந்த நகராட்சி தற்போதைக்கு நிறைவு செய்யாத காரணத்தால், இந்தச் செயற்குறிப்பு மறுக்கப்பட்டது.

திரு. சு. துரைசாமி : தலைவர் அவர்களே, ஒரு லட்சம் மக்கள் தொகை இருந்து 25 லட்ச ரூபாய்க்கு மேற்பட்ட வருமானம் இருந்தால் தேர்வுத்தர நகராட்சியாக மாற்றலாம் என்று முறையிருக்கிறது. அந்த அளவுக்கு வருமானம் திருப்பூர் நகர மன்றத்திற்கு இன்றுவரை கடந்த மூன்று ஆண்டுக்காலத்திற்கு வரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. எனவே, அதைத் தேர்வுத்தர நகராட்சியாக மாற்றும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, 1 லட்சம் மக்கள்தொகை இருந்து 25 லட்சம் ரூபாய்க்கு வருமானம் இருக்குமானால் அதைத் தேர்வுத்தர நகராட்சியாக மாற்றலாம். ஆனால், மூன்று ஆண்டுக்கால கணக்குகளைப் பார்க்கவேண்டுமென்று இருக்கிறது. அப்படிப் பார்த்தால் கடந்த மூன்று ஆண்டு காலத்திலே 1967-68-லே 17 லட்சம் ரூபாயும், 1968-69-லே 27 லட்சம் ரூபாயும், 1969-70-லே 25 லட்சம் ரூபாயும் இந்த ஆண்டும் கணக்குப் பார்த்தால் 25 லட்சத்திற்கு இருக்குமானால் 1968-69, 1969-70, 1970-71 ஆகிய மூன்று ஆண்டுகளைக் கணக்கில் எடுத்துக்கொண்டு அந்த அடிப்படையிலே பிறகு வேண்டுமானால் பரிசீலிக்கலாம். ஆனால், இந்தக் கோரிக்கை எழுப்பப்பட்ட நேரத்திலிருந்து கணக்குப் பார்த்தால் போதிய வருமானம் இல்லாத காரணத்தினாலேதான் மறுக்கப்பட்டிருக்கிறது.

திரு. சு. துரைசாமி : தலைவர் அவர்களே, கடந்த ஆண்டுகளிலும் 25 லட்சம் ரூபாய் அளவுக்கு வருமானம் வந்திருக்கிறது. இந்த ஆண்டும் அதைப்போல் இருக்கிறது. எனவே அரசு அதைப் பற்றி பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, 1970-71 மார்ச் முடியத்தான் பார்க்கவேண்டும், கணக்கு வந்ததற்குப் பிறகு ஆடிட் ரிப்போர்ட் வந்ததற்குப்பிறகு வருமானத்தைக் கண்டு அந்த அடிப்படையிலே தொடர்ந்து மூன்று ஆண்டுகளுக்கு அந்த அளவுக்கு வருமானம் இருந்தால் அதைப்பற்றிப் பரிசீலனை செய்யலாம்.